# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2371/48 - 2024 පෙබරවාරි මස 16 වැනි සිකුරාදා - 2024.02.16

*2371/48 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம்*

*2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 7 ஆம் இலக்கப் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 29 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**ரணில் விக்கிரமசிங்க,**
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசிய கொள்கைகள் அமைச்சர்.

கொழும்பு 01,
2024, பெப்புருவரி 14.

**ஒழுங்குவிதிகள்**

2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் (ஒழுங்குவிதிகள்) கீழ் விடுக்கப்பட்ட, திருத்தப்பட்டவாறான 2021 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 03 ஆந் திகதியிடப்பட்ட 2213/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2021 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆளொருவரினால் இலங்கையில் பொறுப்பேற்கப்பட்ட மூலதனக் கொடுக்கல் வாங்கல்களின் வகுப்புக்கள்) ஒழுங்குவிதிகள் இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றன :

(i) ஒழுங்குவிதிகளின் அட்டவணையின் பாகம் I இன் தலைப்பு 'அ' இன் கீழ், 1 ஆம் பந்தியின் துணைப்பந்தி (9) அதன் கீழ், செய்யப்பட்ட எந்தவொரு விடயத்திற்கும் பங்கமின்றி இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.

(ii) ஒழுங்குவிதிகளின் அட்டவணையின் பாகம் I இன் தலைப்பு 'அ' இன் கீழ், 4 ஆம் பந்தியின் துணைப்பந்தி (1) இன் விடயம் (உ) ஒழிக்கப்பட்டு பின்வருவனவற்றின் மூலம் பதிலீடு செய்யப்படுகின்றது.

"(உ) ஒழுங்குவிதி 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தில் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு, 2021 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க ஒழுங்குவிதிகளின் (திருத்தப்பட்டவாறான) கீழ் இலங்கையிலுள்ள கம்பனிகளுக்கு மூன்றாண்டுகளுக்கும் குறைவான காலப்பகுதியொன்றுடன் ஏற்கனவே வழங்கப்பட்ட கடன்களின் மீள்கொடுப்பனவுகள் தொடர்பில், கடன்பாட்டாளர் அத்தகைய கடன்களை மீளச்செலுத்துவதற்குப் போதுமான வெளிநாட்டுச் செலாவணி மீதியை/காசுப்பாய்ச்சலைக் கொண்டிருக்காதவிடத்து, அக்கடன்களை இலங்கை ரூபாவினை மாற்றுவதன் மூலமாக செலுத்துவதற்கு அனுமதி வழங்கப்படுகிறது".

EOG 02-0132

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.